**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101906

1. District மாவட்டம் : Chennai  PS: காவல்நிலையம் DVAC, HQRS  Year: ஆண்டு 2023  FIR No.: மு.த.அ. எண் 03  Date: நாள் 04.05.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: Sec 7
(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 26.04.2023  Date to : நாள் வரை 16.45 hrs
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.05.2023  Time : நேரம் 08.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.05.2023  Time : நேரம் 12.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி O/o Assistant Executive Engineer, PWD, OD/Registration Department, Kuralagam 1st floor, Chennai - 600 104
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. Seeralan  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A. L. Pandion
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 04.02.1975  (d) Nationality : நாட்டினம்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் SBI Panel Advocate  (g) Address : முகவரி Plot No. 33, Kumaran Nagar, Kannivakkam, Guduvanchari, Chengalpattu District - 603 202

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. Ramesh, Assistant Executive Engineer, PWD, OD/Registation Department, Kuralagam 1st Floor, Chennai - 600104.
2. Tr. Vijayakumar, Assistant, O/o AEE, PWD, OD/Registration Department, Kuralagam 1st Floor, Chennai - 600 104.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Given in Seperate Sheet is annexed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed K.S. Anitha Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் பெற்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 04/05/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04.05.2023 at 12.00hrs.

Name: பெயர் K.S. Anitha
Rank: நிலை Inspector of Police No. எண் ………
SPC – II, VRAC, Chennai – 16.

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.3/2023 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு :-**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வுப்பிரிவு காவல் ஆய்வாளர் K.S.அனிதா ஆகிய நான் இன்று 04.05.2023 ஆம் தேதி காலை 08.00 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி, கன்னிவாக்கம், குமரன் நகர், பிளாட் எண்.33 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. P.சீராளன் என்பவர் என் அலுவலகம் ஆஜராகி என்னிடம் எழுத்துப்பூர்வமான புகார் மனு ஒன்றை அளித்தார். அவர் அளித்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு.

அனுப்புநர்

P.சீராளன், வயது-47,<br>
S/o A.L.பாண்டியன்,<br>
SBI Panel advocate,<br>
Plot No.33. குமரன் நகர்,<br>
கன்னிவாக்கம்,கூடுவாஞ்சேரி,<br>
செங்கல்பட்டு மாவட்டம்.-603202.

பெறுநர்

காவல் ஆய்வாளர் அவர்கள்,<br>
சிறப்பு புலனாய்வு பிரிவு,<br>
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>
ஆலந்தூர், சென்னை-16.

அய்யா,

நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 2004 ல் சென்னை சட்ட கல்லூரியில் இளநிலை சட்டபடிப்பை முடித்து, 2019 முதல் SBI panel Advocate ஆக பணிபுரிந்து வருகிறேன். எனது அலுவலகமானது கூடுவாஞ்சேரி 2வது தெருவில் Defence colony யில் பிளாட் எண்.34B என்ற முகவரியில் அமைந்துள்ளது. SBI panel Advocate ஆக எனது

பணியானது சென்னை Local Head Office அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் வரும் கிளைகளில் பணிபுரிய SBI Bank மூலமாக Authorized செய்யப்பட்டுள்ளது. நான் SBI Bank சார்பாக அவர்கள் தரும் சட்டம் சம்பந்தப்பட்ட பணிகளை மேற்கொள்வது மற்றும் பொதுவான வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறேன். அதில் ஆவணங்கள் பதிவு செய்வதும் அடங்கும். இதன் அடிப்படையில் காயத்திரி, சத்தியா (எ) சந்தோஷி, முத்துவேல், செந்தாமரை, சுபம் திவாரி, சந்திரன், சுஜிதா, யாழினி & ராம்பிரசாத், கார்த்திக் ராஜலிங்கம், ராஜேஷ் கண்ணன் & பிரியதர்ஷினி மற்றும் மதிபாலன் ஆகியோர்கள் அவர்களுக்குரிய Sale deed and MOD-DT(Memorandum of Deposit-Title Deeds) ஆகிய ஆவணங்களை பதிவு செய்வதற்காக அவர்களால் எனக்கு Authorized வழங்கியுள்ளார்கள். இதற்காக நான் அவர்களிடமிருந்து தொழில் முறை கட்டணத்தை நேரடியாகவும் வங்கி கணக்கு மூலமாகவும் பெற்றுள்ளேன். இதன் தொடர்ச்சியாக மேற்படி 11 நபர்களும் கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட பதிவுத்துறை ரசீது எண் மற்றும் ஆவண எண்களின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | நபர்களின் பெயர் | இரசீது எண். | ஆவண எண் |
|---|---|---|---|
| 1. | காயத்திரி, | 5209/2023 | 4672/2023 |
| 2. | சத்தியா (எ) சந்தோஷி, | 5212/2023 | 4675/2023 |
| 3. | முத்துவேல், | 5215/2023 | 4677/2023 |
| 4. | செந்தாமரை, | 5218/2023 | 4680/2023 |
| 5. | சுபம் திவாரி, | 5221/2023 | 4683/2023 |
| 6. | சந்திரன், | 5223/2023 | 4685/2023 |
| 7. | சுஜிதா | 5226/2023 | 4688/2023 |
| 8. | யாழினி & ராம்பிரசாத் | 5229/2023 | 4691/2023 |
| 9. | கார்த்திக் ராஜலிங்கம், | 5232/2023 | 4694/2023 |
| 10. | ராஜேஷ் கண்ணன் & பிரியதர்ஷினி | 5233/2023 | 4695/2023 |
| 11. | மதிபாலன் | 5235/2023 | 4697/2023 |

மேற்படி 11 நபர்களின் பதிவு செய்யப்பட்ட Sale deed ஆகிய ஆவணங்கள் மேல் நடவடிக்கைக்காக கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அவர்களிடமிருந்து உதவி பொறியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது என்பதை தெரிந்துகொண்டேன். அதன் பின்பு சென்னை குறளகம்

முதல் தளத்தில் அமைந்துள்ள மாற்றுப்பணி பதிவுத்துறையில் உதவி செயற்பொறியாளர் திரு.ரமேஷ் அவர்களை சந்தித்து ஆவணங்கள் பற்றிய தற்போதைய நிலவரம் தெரிந்துகொள்வதற்காக 26.04.2023 அன்று மாலை சுமார் 04.45 மணியளவில் மேற்படி AEE office க்கு நான் சென்றிருந்தேன். அங்கு அலுவலகத்தில் AEE அவர்களின் Assistant திரு.விஜயகுமார் என்பவர் இருந்தார். அவரிடம் சென்று என்னை அறிமுகம் செய்து கொண்டு EC entry -ல் highlight செய்யப்பட்ட மேற்கண்ட 11 நபர்களின் ஆவணங்களின் நிலை பற்றி கேட்டேன். அதற்கு அவர் என்னிடமிருந்து EC entry -யை பார்வையிட்டு அவர்களின் அலுவலகத்தில் காணப்பட்ட பதிவேட்டில் சரிபார்த்து கொண்டார். அதன்பின்பு விஜயகுமார் என்னிடம் ஒரு பைலுக்கு களப்பணிக்கு லஞ்சமாக ரூபாய் ஐந்தாயிரம் கொடுத்தால் Order போட்டு Adjust செய்து கொள்கிறேன். பின்பு நான் அவரிடம் காண்பித்த EC entry -யில் கடைசி பக்கத்தில் விஜயகுமார் அவர்கள் தனது கையில் வைத்திருந்த பேனாவினால் VIJAYAKUMAR 8681027080 என்று எழுதி என்னிடம் இது தனது பெயர் மற்றும் செல் நம்பர் என்று கூறி பணத்தை ரெடி பண்ணிவிட்டு தொடர்பு கொள்ள கூறினார். அதைத்தொடர்ந்து அலுவலக அறையில் உள்ளே அமர்ந்திருந்த உதவி செயற்பொறியாளர் அவர்களை சந்திக்க அனுமதி கேட்டபோது விஜயகுமார் அவர்கள் உள்ளே சென்று ரமேஷ் அவர்களிடம் பேசிவிட்டு வெளியே வந்து சிறிது நேரம் வெய்ட் செய்யும்படி கூறினார். பின்னர் சிறிது நேரம் கழித்து விஜயகுமார் என்னிடம் வந்து உள்ளே ரமேஷ் அவர்களை சந்திக்கும் படி கூறினார். நான் உள்ளே சென்று ரமேஷ் அவர்களிடம் மேற்படி 11 நபர்களின் பதிவு ஆவணங்களின் தற்போதைய நிலை பற்றி கேட்டேன் அதற்கு அவர் களப்பணி செய்வதற்கு ஒரு பைலுக்கு லஞ்சமாக ரூபாய் ஐந்தாயிரம் கொடுக்கவேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் வேறு Procedure ஏதாவது இருந்தால் கூறுங்கள் என்று AEE அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர் நீங்களா கொடுக்க போறீங்க உங்க கிளைன்டு கிட்ட சொல்லி போட்டு செட்டில் பண்ணுங்க என்று கூறினார். அதற்கு நான் அவ்வளவு முடியாது ரொம்ப கஷ்டம் என்று கூறினேன். அதற்கு ரமேஷ் அவர்கள் சரி விஜயகுமார்க்கிட்ட கேளுங்க அவர் என்னன்னு சொல்லுவாறு என்று கூறினார். நான் வெளியே வந்து விஜயகுமாரிடம் இது பற்றி கூறினேன். அதற்கு அவர் Internal Adjustment, formalities மற்றும் வேறு வேலை நிறைய இருக்கு என்று கூறி இறுதியாக ஒரு பைலுக்கு (செந்தாமரை 4680/2023) பற்றாக்குறை முத்திரை தீர்வை ரூபாய் பதினைந்தாயிரம் கட்டவேண்டியுள்ளதால் இந்த பைலுக்கு காசு ஏதும் வேண்டாம். மற்ற 10 பைலுக்கு களப்பணிக்கு மொத்தமாக ரூபாய் இருபத்தைந்தாயிரம் கொடுங்கள் Order ரெடி என்று கூறி நீங்கள் லஞ்சம் பணத்தை செட்டில் செய்தால் ஆன்லைன் லிங்க் சார்பதிவாளர் கூடுவாஞ்சேரிக்கு அனுப்பிவிடுவேன். நீங்கள் அங்கே சென்று செந்தாமரை ஆவணம் தவிர மற்ற 10 நபர்களுக்குறிய அசல் ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம் என்று விஜயகுமார் கூறினார்.

எந்தவித Defecit இல்லாமல் அரசு பணியை செய்வதற்கு கட்டாயப்படுத்தி என்னிடம் லஞ்சம் கேட்டது எனக்கு மிகுந்த மனவேதனை ஏற்படுத்தியது. இதற்காக மேற்படி AEE மற்றும் அவர் உதவியாளருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை ஆகவே என்னிடம் களப்பணிக்கு 10 பைலுக்கு தலா ரூ.2,500/- வீதம் மொத்தம் ரூ.25,000/-லஞ்சம் கேட்ட AEE ரமேஷ் மற்றும் அவர் உதவியாளர் விஜயகுமார் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் மேற்படி 11 நபர்களுக்குறிய ஆவண பதிவு ரசீது நகல்கள் மற்றும் ஹைலைட் செய்யப்பட்ட EC entry நகல்கள் இணைத்துள்ளேன்.

இப்படிக்கு
Sd/-xxxxx
(P.சீராளன்)
04.05.2023

Sir,

Received the petition today (04.05.2023) at 08.00hrs. A quiet and quick verification of the general reputation of the accused public servants was made. After satisfaction information was given to the higher officials and after getting their permission a case in V&AC, HQRS, Cr.No.03/2023 u/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 is registered today (04.05.2023) at 11.00 hrs. against the accused officers.

Sd/-K.S.Anitha
04.05.2023
Inpr/SIC-II,V&AC,Chennai.